மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.மஎண்.03/2024
உள்
அசல் வழக்கு எண்.22/2023
--------

காளியம்மாள் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

குருசாமி ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 28.02.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 25.03.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஜெகதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை விதிகள் 75, 76 ன் கீழ் இம்மனுவினை ஏற்று மனுவில் கண்டுள்ள காரணங்களினால், அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களை சாட்சி மூலம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து பிரதிவாதி தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக குறியீடு செய்ய உத்தரவிடக்கோரி 28.02.2024 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>

பிரதிவாதி பெயரில் பிராது தபசில் சொத்தை எவ்வித பாத்தியமும், எவ்வித அனுபவமும் இல்லாமல் பிரதிவாதி தந்தை நாராயணனுக்கு அரசு வழங்கிய பட்டா

இடத்திற்கு நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்து அதில் பிரதிவாதி ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்து வாதி தரப்பு சாட்சிகள், விசாரணை செய்து முடிக்கப்பெற்று பிரதிவாதி தரப்பு 1, 2, 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சிக்கு வாய்தா ஏற்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா, சங்கரபாண்டியாபுரம் கிராமம், அருந்ததியர் காலனியில் சுமார் 40 வருடங்கள் முன்பு வீடு இல்லாதவர்களுக்கு 9 தொகுப்பு வீடுகள் அரசு மூலம் வீடு கட்டி கொடுத்து இலவச பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 9 தொகுப்பு வீடுகளில் ஒரு வீடு மனுதாரர்/பிரதிவாதி தந்தை நாராயணனுக்கு சர்வே எண்.578/3B2F ல் பரப்பு 0.200.00 மீட்டர் நிலத்தில் அரசு மூலம் இலவசமாக குடியிருப்பு வீடு கட்டி கொடுத்து இலவச பட்டா 350 அரசு மூலம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி தந்தை நாராயணனுக்கு பாத்தியப்பட்ட மேற்படி சர்வே எண்.578/3B2F ல் உள்ள இடத்தை எதிர்மனுதாரர்/வாதியின் தந்தை குருசாமி, த/பெ.குருசாமி என்பவர் தனக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்று அரசு கட்டிக்கொடுத்த வீட்டை மறைத்து காலிமனையாக காட்டி கடந்த 2002 ம் ஆண்டு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் குருசாமிக்கு மோசடியாக எழுதிக் கொடுத்துள்ளார். வாதியின் தந்தை கடந்த 2007 ம் ஆண்டு காலமாகிவிட்டார். ஆனால் 2002 ம் ஆண்டுதானசெட்டில்மெண்ட் பத்திரம் மோசடி ஏற்படுத்திவிட்டு, வாதியின் தந்தை குருசாமி த/பெ.பெருமாள் உயிருடன் இருக்கும்போது மோசடியாக அரசு கட்டிக் கொடுத்த வீட்டிற்கு 1997, 1998 ம் ஆண்டு மோசடியாக வாதி தனது பெயரில் ரசீதுகளை போட்டுள்ளார். இதிலிருந்து வாதி தாக்கல் செய்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரசீதுகள் அனைத்தும் மோசடி என மிக தெளிவாக தெரிய வருகிறது. எனவே, மேற்படி அசல் வழக்கில் வாதி உண்மைக்கு புறம்பாக ஆவணங்களை உற்பத்தி செய்து வாதி பிராதை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் பிரதிவாதி தனது தரப்பு சாட்சியை நிரூபிக்க தாவா பிராது தபசில் சொத்து சம்பந்தமாக அரசு பராமரித்து ரும் சில ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைத்து ஆவணங்களை பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு பராமரித்து வரும் ஆவணங்கள் வெம்பக்கோட்டை வட்டம், சங்கரபாண்டியபுரம் கிராம நிர்வாக அலுவலர் வசம் உள்ளது. அவ்வாறு வரவழைக்கப்பட்டு ஆவணங்களை பிரதிவாதி தரப்பு ஆவணமாக குறியீடு

செய்து கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி ஆவணங்களை பிரதிவாதி Copying Charge கட்ட தயாராக உள்ளார் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**:–

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டடப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. மனுவில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர்த்து மற்ற சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 3 சாட்சிகளை விசாரித்துள்ளார். Exhibit B1 முதல் B7 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். அதில் 1வது ஆவணமாக பட்டா எண்.350ற்கான நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் தற்போது வழக்கு விசாரணையை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் பட்டா எண்.350, நத்தம் அடங்கல், நத்தம் சிட்டா, நத்தம் எப்.எம்.பி மேப், கிராம வரைபடம், அ பதிவேடு உட்பட யார் யார் பெயருக்கு இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் என பல்வேறு வருவாய்த்துறை ஆவணங்களைப் பொறுத்து கிராம நிர்வாக அலுவலருக்கு சாட்சி சம்மன் அனுப்ப வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் அனைத்தும் வருவாய்த்துறையினர் வசம் உள்ள பொது ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். ஆனால், மனுதாரர் அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நேரடியாக மனு தாக்கல் செய்துள்ளார்.

மேலும், மனுதாரர்/பிரதிவாதி தனது தகப்பனார் நாராயணன் பெயரில் உள்ள பட்டா எண்.350ஐ ஏற்கனவே தனது தரப்பு சான்றாவணமாக (Exhibit P1) குறியீடு செய்துள்ள நிலையில் மீண்டும் அதனை கிராம நிர்வாக அலுவலர் மூலமாக சாட்சி சொல்ல வேண்டும் என்று கூறியுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், சர்வே எண்.578ல் நத்தம் அடங்கல், நத்தம் எப்.எம்.பி மேப், கிராம வரைபடம், அ பதிவேடு, இலவச பட்டா வழங்கப்பட்ட விபரம் ஆகிய ஆவணங்கள் வழக்கில் உள்ள பிரச்சனைக்கு சிறிதும் தொடர்பில்லா ஆவணங்கள் ஆகும். இந்த வழக்கில் உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு மேற்கண்ட ஆவணங்கள் எந்த வகையிலும்

பயன்படப்போவதில்லை. மேலும், எதிர்மனுதாரர்/வாதி வழக்கு வழக்கு தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று மனுதாரர்/பிரதிவாதி தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் எதுவும் வழக்கிற்கு அவசியமில்லாத ஆவணங்களாகும். எனவே, மனுதாரர் மனுவில் கோரியுள்ள அவணங்கள் அனைத்தும் அசல் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களாகவும், தேவையில்லாத ஆவணங்களாக இருந்து வருவதால் அதனை நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம் அளிப்பதற்காக கிராம நிர்வாக அலுவலருக்கு சம்மன் அனுப்ப வேண்டுமென்று மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் வழக்கு விசாரணையை காலம் கடத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும், வழக்கில் இறதி முடிவு எடுக்கவிடாமல் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும் மனு தாக்கல் செய்துள்ளதால், மேற்படி மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு:-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களை சாட்சி மூலம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து பிரதிவாதி தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக குறியீடு செய்ய உத்தரவிடக்கோரி 28.02.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய

முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். ஒரு வழக்கைப் பொறுத்து ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரரால் மனுவில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை நிரூபணம் செய்வதற்காக அவரது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைக்க அனுமதி வழங்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். தவறும்பட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களை சாட்சி மூலம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து பிரதிவாதி தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக குறியீடு செய்ய உத்தரவிடக்கோரி 28.02.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.